# மாலை முரசு

பக்கங்கள் 20+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 13 வெள்ளிக்கிழமை 29.08.2024 | அதிர்வு 29


## நீதிமன்றத்தில் ஆஜரான ராஜித விளக்கமறியலில்



கொழும்பு மேல் நீதி மன்றத்தில் இன்று ஆஜ ரான முன்னாள் அமைச் சர் ராஜித சேனாரத்னவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் 03


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### மனிதப் புதைகுழிகள், தமிழினப் படுகொலைகளுக்கு

# சர்வதேசத்திடம் நீதி கோரி கையெழுத்துப் போராட்டம் தமிழர் தாயகத்தில் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு, கிழக்கில் அடையாளம் காணப் பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் தமிழி னப் படுகொலைகளுக்குச் சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம் தமிழர் தாயகத்தில் இன்று ஆரம்பமானது.

இதன் பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று காலை நடைபெற்றது.

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் அடையாளம் 04



# சுமந்திரன், மனோ, நிஸாம் அமெ. குழுவினருடன் பேச்சு

ஆட்சி, வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் உறவுகளை வளர்ப்பதற்கான வழிகளை ஆராய்வதற்காக அமெரிக்காவிலிருந்து இரு தரப்பு காங்கிரஸ் உறுப்பினர்களையும் கொண்ட் அலுவலர்கள் குழு ஒன்று இலங்கைக்கு வருகை தந்து இலங்கை அரசுத் தரப்பு உட்பட பல் தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.

இந்தக் குழுவினர் இன்று தமிழ் பேசும் 03





# கிளிநொச்சியில் கோர விபத்து! இரு இளைஞர்கள் உயிரிழப்பு!!

கிளிநொச்சியில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், பரந்தன் அரச விதை உற்பத்தி நிலையம் முன்பாக இருந்த பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸை நிறுத்திய போது, பின்னால் வந்த டிப்பர் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது.

அதன்போது, டிப்பர் வாகனத்துக்குப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், மற்றையவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.









# வைத்தியசாலையில் இருந்து இன்று வீடு திரும்பிய ரணில்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வெள்ளிக்கிழமை மீண்டும் வீடு திரும்பியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

வைத்தியசாலையில் இருந்து வெளியேறினாலும் ரணில் விக்கிரமசிங்க வீட்டில் தொடர்ந்து ஓய்வு எடுக்க வேண்டும் என்று வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலை குறித்து அவரது குடும்ப வைத்தியர் கண்காணிப்புடன் இருத்தல் வேண்டும் என்றும் வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக இலண்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் செய்வதற்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கடந்த 22 ஆம் திகதி பிற்பகல் கைது செய்யப்பட்ட நிலையில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை கடந்த 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து, உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிக சர்க்கரை அளவு காரணமாக மருத்துவ ஆலோசனையின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர், ரணில் விக்கிரமசிங்க உடல் நலக் குறைவு காரணமாக நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த 26 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் மூன்று தலைவர்களைக் கொழும்பில் சந்தித்துப் பேசினர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஸாம் காரியப்பர் எம்.பி., இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடனேயே அந்தக் குழுவினர் விரிவான பேச்சுகளில் ஈடுபட்டனர்.

## நீதிமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் தன்னைக் கைது செய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவைத் தற்காலிகமாக இரத்துச் செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ஆனால், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மனுவை நீதிமன்றம் நிராகரித்தது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு மேல் நீதிமன்றில் இன்று காலை ஆஜராகியமை குறிப்பிடத்தக்கது.

# நிமல் லான்சா, அத்துரலிய ரத்ன தேரர் செப்டெம்பர் 12 வரை விளக்கமறியலில்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமல் லான்சா, அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்தில் இன்று சரணடைந்த நிலையில் உடனடியாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தாக்குதல் நடத்துதல் மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டின் பேரில் நிமல் லான்சா கைது செய்யப்பட்டார்.

அவரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தலைமறைவாகியிருந்த அவர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.











## சர்வதேசத்திடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்றதமிழினப்படுகொலைகளுக்கு நீதியைக் கோருவதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும், இன்று ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாட்டின் பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று முன்னெடுக்கப்பட்ட நிலையியில் அதில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்

(கி.வசந்தன்)

செம்மணி உள்ளிட்ட வடக்கு, கிழக்கு மனிதப் புதைகுழிகள் மற்றும் இனப் படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்தப் போராட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப் பட்டது. அதற்கமைவாக வவுனியா – இலுப்பையடிப் பகுதியிலும் கையெழுத் துப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பி னர் ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப் பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், அரசியல் கட்சி பிர முகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சர்வதேச நீதி கோரி கையொப்பம் இட்டனர்.
















# முல்லைத்தீவில் கையெழுத்துப் போராட்டம்

**(பா.சதீசன்)**

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைகளுக்குச் சர்வதேச நீதியைக் கோரும் வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெறும் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு முல்லைத்தீவு நகரில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஞா.ஜ/ட்சன் தலைமையில் இன்று முன்னெடுக் கப்பட்டது.

இந்தக் கையெழுத்திடும் செயற்பாட்டில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவனேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் சி.லோகேஸ்வரன், முன்னாள் கரைதுறைப்பற்று தவிசாளர் க.விஜிந்தன், மாந்தை கிழக்கு உப தவிசாளர் வரதன் , பிரதேச சபை உறுப் பினர்களான அமலன், பவுள்ராஜ், குணம் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள், கட்சி உறுப்பினர்கள், பங்குத் தந்தை யர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தார்கள்.















# நெளுக்குளத்தில் கையெழுத்துப் போராட்டம்

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கில் உள்ள மனிதப் புதைகுழிகளுக்கும், நடைபெற்ற இனப் படுகொலைக்கும் சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட உப தலைவர் பாலச்சந்திரன் சிந்துஜன் தலைமையில் இன்று காலை 8.30 மணி முதல் 10 மணி வரையில் வவுனியா – நெளுக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை தவிசாளர் பா.பாலேந்திரன், உறுப்பினர்களான கே.தர்சினி, வீ.ஶ்ரீதரன், குகன் ஆகியோருடன் கட்சிகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது எழுத்து மூலமான கோரிக்கையை வலுப்படுத்தியமை குறிப்பிடத் தக்கது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றினைந்து சர்வதேச நீதி கோரிய மேற்படி கையெழுத்துப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.











# நாவற்குழியில் காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்கள்: வழக்குத் தீர்ப்பு ஒக்டோபர் மாதத்துக்கு ஒத்திவைப்பு

(த.சுபேசன்)



யாழ். தென்மராட்சி, நாவற்குழிப் பகுதியில் கடந்த 1996ஆம் ஆண்டு இராணுவத்தின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 24 இளைஞர்கள் தொடர்பான வழக்கு தீர்ப்புக்காக இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் தவணையிடப்பட்ட போதிலும் நீதிவான் வருகை தராத காரணத்தால் மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி தீர்ப்புக்காகத் தவணையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பின் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

“கடந்த 1996ஆம் ஆண்டு நாவற்குழியில் இடம்பெற்ற இராணுவச் சுற்றிவளைப்பின் பின் காணாமல்போன 24 நபர்களில் மூன்று பேர் தொடர்பிலான ஆட்கொணர்வு மனு 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு சில வருடங்களாக மூன்று வழக்குகளும் விசாரணைக்காக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று தற்போது தீர்ப்புக்காகத் தவணையிடப்பட்டுள்ளது.

இன்று நீதிவான் வருகை தராத காரணத்தால் மேற்படி வழக்கு தீர்ப்புக்காக எதிர்வரும் ஒக்டோபர் 24ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.” – என்றார்.






# யாழ்ப்பாணத்தில் அரச பஸ்களின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(எஸ்.நிதர்ஷன்)

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், அதிகாரிகளுடன் நடத்திய பேச்சின் பின் யாழ். மாவட்டத்தில் அரச பஸ்களின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

யாழ். மாவட்ட அரச பஸ்கள் நேற்று அதிகாலை முதல் முன்னெடுத்திருந்த பணிப்பகிஷ்கரிப்பு இன்று காலை 10 மணியளவில் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணை நாதன் இளங்குமரன், யாழ். அரச பஸ் சாலை அதிகாரிகளிடம் பேச்சில் ஈடுபட்டமைக்கிணங்க அரச பஸ் சேவைகள் யாவும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கல்வித் துறை நெருக்கடி

நாட்டிலுள்ள ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட அனைத்து பாடசாலைகளையும் ஒரே தடவையில் மூடுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாக மீண்டும் செய்திகள் அடிபடத் தொடங்கியுள்ள நிலையில், அத்தகைய நடவடிக்கை எதையும் எடுக்கவில்லையென கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன் ஒவ்வொரு பாடசாலையின் சூழ்நிலைகளின் அடிப்படையில் தேவையான முடிவுகள் எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு கல்வி வலயத்திலும் உள்ள பாடசாலைகளை வலுப்படுத்துவதற்கான ஒரு திட்டம் ஏற்கனவே நடந்து வருவதாகவும், ஒரு குறிப்பிட்ட பாடசாலையைத் தொடர்ந்து பராமரிப்பதில் உள்ள நெருக்கடிகளின் அடிப்படையில் மட்டுமே மூடுவதற்கான பரிசீலனை தனித் தனியாக மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த சர்ச்சை ஒன்றும் புதிய விடயமல்ல. கடந்த சில ஆண்டுகளாக கல்வி நிர்வாகம் தொடர்பான உயர்மட்டங்களில் இந்தக் கருத்து வலுவாக ஊன்றி வருகின்ற போதும், இத்தகைய முயற்சிக்கு கல்வித் துறை வட்டாரங்களில் பரவலாக எழும் எதிர்ப்புக் காரணமாக அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மட்டும் தள்ளிப் போடப்பட்டு வருகின்றது.

நாடு முழுவதும் உள்ள 10,194 பாடசாலைகளில் மொத்தம் 1,486 பாடசாலைகளில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்கள் மட்டுமே பயில்கின்றனர் எனச் சமீபத்தில் தெரிவிக்கப்பட்டது.

வட மாகாணத்தில் இதுபோன்ற பாடசாலைகள் அதிகமாக - 275 பாசாலைகள் - உள்ளன. அதைத் தொடர்ந்து மத்திய மாகாணத்தில் 240, சப்ரகமுவ மாகாணத்தில் 230, ஊவா மாகாணத்தில் 158, கிழக்கு மாகாணத்தில் 141, வடமேல் மாகாணத்தில் 133, தென் மாகாணத்தில் 125, வடமத்திய மாகாணத்தில் 111, மேல் மாகாணத்தில் 73 பாடசாலைகள் இவ்வாறு ஐம்பதுக்குக் குறைந்த மாணவர் எண்ணிக்கையில் உள்ளன.

குறைந்த மாணவர் உள்ள பாடசாலைகளை மூடிவிட்டு அருகிலுள்ள பாடசாலைகளுக்கு அந்த மாணவர்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில், இலங்கை அதிபர்கள் சங்கம் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. மாணவர்களை அருகிலுள்ள பாடசாலைகளுக்கு மாற்றுவது நகர்ப்புற வகுப்பறைகளில் நெரிசலை அதிகரிக்கும் என்று அது எச்சரித்துள்ளது.

அரசின் இந்த உத்தேச திட்டத்தினால் "தற்போது சுமார் 3 சதவீதமாக இருக்கும் ஆரம்பக் கல்வியை விட்டு வெளியேறும் மாணவர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்படும்" என இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

இது, தொலைதூர மற்றும் கடினமான பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பெரும் அநீதி என்றும், மேலும், இந்த நடவடிக்கையின் காரணமாக கிராமப்புறங்களில் உள்ள சுமார் பத்தாயிரம் பாடசாலை மாணவர்களை உதவியற்றவர்களாக மாறும் நிலை ஏற்படும் என்றும் அது எச்சரிக்கின்றது.

இந்த சாதக, பாதக அழுத்தங்களுக்கு மத்தியில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிலையில் அரசியல் தலைமைத்துவம் உள்ளது.




# நாளைய போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள்!

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி செல்வராணி கோரிக்கை

**(பாறுக் ஷிஹான் )**

நாளை 30 ஆம் திகதி வடக்குக் கிழக்கில் நடைபெறவுள்ள சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் நடைபெறும் சகலரும் போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி கேரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நிகழ்வை முன்னிட்டு வடக்கில் சங்கிலியன் சிலையிலிருந்து தொடங்கி செம்மணிவரை பேரணி ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேரணி நிறைவடைந்து அவ்விடத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் அதே நாளில் கல்லடி பாலத்தில் இருந்து போராட்டம் ஆரம்பித்து காந்தி பூங்கா வரை ஊர்தி ஊர்வலத்துடன் சென்று கவனவீர்ப்புப் போராட்டம் காந்தி பூங்காவில் முன்னால் இடம்பெறும். இந்தப் போராட்டமானது எட்டு மாவட்டங்களில் இடம்பெறவுள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உற வுகளின் 17 வருட காலமாக உங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று நாங்கள் நீதி கேட்டு போராடிக் கொண்டிருக்கிறோம்.

16 வருட காலங்களாக இலங்கை ஆட்சியில் இருந்த பல ஜனாதிபதிகளுடன் எங்கள் உறவுகளுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதை கேட்டு உண்மையை கூறும் படியும் உங்களது உறவுகளை உயிருடன் கூட்டி சென்று பின்னர் காணாமல் ஆக்கப்பட்டது இவ்வாறு காணாமல் ஆக்கிய சம்பவத்துடன் இலங்கை இராணுவ படையினரிடம் கேட்டு கூறுங்கள் என எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கேட்டிருக்கின்றோம்.

ஆனால் நாங்கள் இன்று 16 வருடங்களாக உள்ளக பொறிமுறையில் நம்பிக்கை இல்லாமல் தற்போது நாங்கள் சர்வதேச பொறிமுறையை நாடி இருக்கின்றோம்.சர்வதேச பொறிமுறைக்கு ஊடாக எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையையும் நீதியையும் பெற்று தர வேண்டும் என்று நாங்கள் இப்போராட்டத்தில் கேட்க இருக்கிறோம்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத் தொடரில் எங்கள் உறவுகளுக்கான நீதி அங்கு நிலைநாட்டப்பட வேண்டும்.

அதே நேரம் எமது அரசியல்வாதிகள் அனைவரும் சேர்ந்து எங்களது உறவுகளுக்காக அங்கு சென்று குரல் கொடுத்து இலங்கையில் ஒரு இனப் படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை இந்த உலகத்துக்கு கொண்டு வர வேண்டும் என்று நாம் கேட்டு நிற்கின்றோம்.- என்றார்.

# சாவகச்சேரி நகர சபையில் அமைக்கப்பட்ட நவீன மலசலகூடத் தொகுதி பாவனைக்கு!

சாவகச்சேரி நகர சபையில் சுமார் 6 மில்லியன் ரூபா நிதியியல் மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகளோடு அமைக்கப்பட்ட நவீன மலசலகூடத் தொகுதி பாவனைக்காக கையளிக்கப் பட்டுள்ளது.சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் வடிவேலு சிறிபிரகாஷ், உபதவிசாளர் ஞா.கிசோர் ஆகியோரால் இது பாவ னைக்கு விடப்பட்டுள்ளது.








## வன்னியிலுள்ள சித்த வைத்தியசாலைகளுக்கு

# பயிற்சி நெறிகளை முடித்து காத்திருக்கும் சுதேச வைத்தியர்களை நியமியுங்கள்!

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

வன்னிப் பிராந்தியத்தில் காணப்படும் பல சித்த வைத்தியசாலைகள் வைத்தியர் இன்றி இயங்குகின்றன. இதனால் பல சித்த வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. பல சித்த வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயத்தில் இருக்கின்றன.

இந்த நிலையில் பயிற்சி நெறிகளை முடித்து காத்திருக்கும் சுதேச வைத்தியர்களை இங்கு நியமனம் செய்யும் போது இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்ட முடியும்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் ஒரு மாத காலத்துக்குள் விரைந்து இதற்கான நடவடிக்கை எடுப்பர் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி மற்றும் வடக்குமாகாண சுதேச வைத்தியத் துறைத் திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி தில்லையம்பலம் சர்வானந்தன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இவ்விடயம்தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வன்னியில் பெரும்பாலான சித்த வைத்தியசாலைகளில் வைத்தியரற்ற நிலை காணப்படுகின்றது. இதனால் பல சித்தவைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. பலசித்த வைத்தியசாலைகள் மூடப்படுகின்ற நிலைக்கும் வந்துவிட்டன.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் பல சித்தவைத்தியசாலைகளில் இந்த சிக்கல் நிலைகாணப்படுகின்றது. அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 13 சமூக நல மருத்துவர் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதே நிலமைகள் வவுனியாவிலும் காணப்படுகின்றன. இதனால் மக்கள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின்ற நிலை காணப்படுகின்றது.

எனவே குறித்த சமூகநல மருத்துவர் பதவி வெற்றிடங்களுக்கு ஐந்து வருட கால கற்கை நெறியையும், ஒரு வருட கால உள்ளகப் பயிற்சி நெறியையும் முடித்து நீண்ட காலமாக அரச சேவையில் இணைவதற்கு எதிர்ப்பார்த்துக் காத்திருக்கும் சுதேச வைத்தியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் இந்தவிடயம் தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் எம்மால் வலியுறுத்தப்பட்டிருந்தது. இதன்போது கற்கைநெறி மற்றும் உள்ளகப் பயிற்சிநெறி என்பவற்றை நிறைவுசெய்து நீண்டகாலமாக அரச சேவையில் இணையக் காத்திருக்கும் சுதேசவைத்தியர்களை குறித்த வைத்திய வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்குமாறு ஆளுநரால் வடமாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்கள ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதேவேளை அதனைத் தொடர்ந்து மே மாதத்தில் இடம்பெற்ற இது தொடர்பான விசேட கூட்டத்திலும் குறித்த சுதேச வைத்தியர்களை ஒப்பந்தஅடிப்படையில் நியமனம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுமிருந்தது. எனினும் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை. எனவே இந்த விடயத்தில் துரித நடவடிக்கை தேவை எனவும் வலியுறுத்தினார்.

இந்நிலையில் ஆளுநர் வேதநாயகனும் இந்த விடயம் தொடர்பில் இதுவரை கவனம் செலுத்தாமை குறித்தும் கேள்வி எழுப்பினார்.



# திறன் விருத்திப் பயிற்சி நெறி



வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான திறன் விருத்திப் பயிற்சி நெறி ஒய்வு பெற்ற திருகோணமலை மேலதிக அரச அதிபர் ந.புவனேந்திரனால் நேற்று (28) பிரதேச செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது.







# சொந்த நிதியில் வயல் வீதியைப் புனரமைத்த வவுனியா வடக்கு உப தவிசாளரின் முன்மாதிரி

(கி.வசந்தன்)

வவுனியா வடக்கு உப தவிசாளர் பெரியமடு விவசாயிகளின் கோரிக்கையை அடுத்து தனது மற்றும் நண்பரின் சொந்த நிதியில் வயல் வீதியை புனரமைத்து கொடுத்துள்ள சம்பவம் பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் உறுப்பினரான விநாயகமூர்த்தி சஞ்சுதன் தனது சொந்த வட்டாரமான சின்னடம்பன் பகுதியில் வெற்றி பெற்று உப தவிசாளராக செயற்பட்டு வருகின்றார்.

வவுனியா மாவட்டத்தில் அதிக நிதிப் பற்றாக்குறையுடன் இயங்கும் பிரதேச சபை வவுனியா வடக்கு பிரதேச சபையாகும். இந்நிலையில்இ வவுனியா வடக்கு பெரியமடு கிராமத்தில் வசிக்கும் பெரியகுளம் வயல் விவசாயிகள் உப தவிசாளரிடம்விடுத்த வேண்டுகோளுக்கு அமைய வயல் வீதியைத் தனது சொந்த நிதி மூலமும்இ தனது நண்பரான ஆசிரியர் ஒருவரது நிதியின் மூலமும் குறித்த வீதியைப் புனரமைத்து விவசாயிகள் வயல்களுக்குப் போக்குலரத்துக்கு பயன்படுத்தும் வகையில் செய்து கொடுத்துளார்.

இதன்போது குறித்த பகுதி விவசாயிகள் தமது உழவு இயந்திரத்தையும் சேவையில் ஈடுபடுத்தி இருந்தனர். மக்களுடன் இணைந்து மக்களுக்கான அபிவிருத்தியை சொந்த நிதியில் மேற்கொண்டமை பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.





# மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பெருவிழா!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

வடமாகாண கல்வி அமைச்சின், பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன்,மன்னார் மாவட்டச் செயலகமும்,மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை யும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பெருவிழா நேற்று வியாழக் கிழமை (28) காலை 9.30 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

காலை 9.30 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தடி இல் இருந்து விருந்தினர் வரவேற்பு மற்றும் பண்பாட்டுப் பேரணி ஆரம்பமானது.

சர்வமத தலைவர்கள் முன்னிலையில் மன்னார் மாவட்ட அரச அதிபர் கா.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ்,மன்னார் மாவட்ட மூத்த சட்டத்தரணி எம்.எம்.சபூர் தீன் உள்ளடங்களாக அழைக்கப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது இசை, நடன, கலாச்சார பண்பாடுகளைப் பிரதி பலிக்கும் நிகழ்வுகள் பிரதான பாலத்தில் இருந்து மன்னார் நகர சபை மண்டபம் வரை ஊர்வலமாக இடம்பெற்றன.

மன்னார் நகரசபை மண்டபத்தில் விருந்தினர்களுக்கு கும்ப ஆரத்தி எடுக்கப் பட்டதோடு, தமிழ் தாய்க்கு மாலை அணிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமானது. பல்வேறு நிகழ்வுகள் மன்னார்,நானாட்டான்,முசலி,மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய பிரதேசச் செயலகங்கள் ஊடாக அரங்கேற்றப்பட்டன.

அதனைத்தொடர்ந்து மன்னெழில் 3 நூல் விருந்தினர்களால் வைபவ ரீதியாக வெளியீடு செய்து வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற்றபட்டதோடு, மன்னார், நானாட்டான், முசலி,மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலாளர்கள் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

குறித்த நிகழ்வில் திணைக்கள அதிகாரிகள்,பணியாளர்கள், கலைஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.


















# போதைக்கு அடிமையாதலை களையும் சிகிச்சை முறைகள்!

சமகால மானிட சமூகத்தில் தலைதூக்கி நிற்கின்ற முக்கிய பிரச்சினையாகக் குறிப்பாக இளம் சமுதாயத்தின் வாழ்க்கையை பெரிதும் கேள்விக்குறி ஆக்கி வருகின்ற தீவிர பிரச்சினையாக விளங்குவது போதைவஸ்து ஆகும். இது உடல், உள, சமூக, ஆன்மீக சமனிலையை தாக்கி, ஆளுமையை சீரழிக்கும் நஞ்சாகக் குறிப்பிடப் படுகின்றது. பொதுவாக போதைப்பாவனை என்பது மனதையும் உடலையும் பாதிக்கும் இரசாயனங்களை பயன்படுத்தி நிற்பதைக் குறிக்கும்.

**உளவியலின் அடிப்படையில்**
**அதிகபட்ச போதைப் பாவனை**

“நடத்தைப் பிறழ்வுகள்” ஏற்படுத்துவதாக ஆய்வுகள் குறிப்பிடப்படுகின்றன. போதை அடிமை என்பது போதைப்

பழக்கத்தைக் கொண்ட ஒரு நபர் தெரிந்தோ – தெரியாமாலோ தற்போது வரை போதையில் தங்கியிருக்கும் நிலையை குறிக்கின்றது. இந்த நிலைமை “Drug Addction / Drug Dependency” என அழைக்கப்படும் ஒரு நோய் நிலைமை ஆகும். இது தனிநபர் சம்பந்தப் பட்டதாக அமைந்து பின்பு பிறழ்வுகள் மற்றும் பிரச்சினைகள் சமுதாயத்தில் பல்வேறுபட்ட பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இது நரம்பியல் மண்டலத்தைப் பாதித்து உணர்ச்சிகள், சிந்தனை, நடத்தை மற்றும் உணர்வுகளை மாற்றக்கூடிய தன்மை கொண்டவை.

போதைக்கு அடிமையாகிய ஒருவர் சமுதாய வாழ்விலிருந்து விலகி அந்நியமாவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளது. போதைப் பாவனையால் பொது விதிகளை முறிக்கும் நடத்தைகள் ஏற்படுவதாக Jessor கூறுகின்றார். அத்துடன் இது ஓர் பிறழ்வு நடத்தை (Deviant Behaviour) என்றும் சுட்டிக் காட்டுகின்றார்.

உலகளாவிய ரீதியில் பல்வேறு வகையான போதைவஸ்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மது (அங்கஹஸ்), கானாபிஸ், கெரோயின், மோர்பின், கொடின், பாபிரு ஹோறல், அம்ராமனஸ், யமெஸ் கிரயின்ரூபவ் மெற்டேன் கொகேயின்ரூபவ் L.S.Dரூபவ் D.M.Tரூபவ் சிலோபின்ரூபவ் புகையிலைரூபவ் கஞ்சாரூபவ் ஐஸ் முதலான பல்வேறு வகையான போதை வஸ்துக்கள் பல்வேறு தாக்கங்களை உலகளாவிய ரீதியில் உண்டுபண்ணுகின்றன.

நமது நாட்டிலும் (இலங்கையிலும்) அண்மைக்காலங்களில் அதிகரித்த பாவனை காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையில் நாளாந்தம் 40 -50 பேர் மதுப்பழக்கத்தால் மரணமடைகின்றனர் மற்றும் போதைப்பொருள் மையம் தெரிவிக்கின்றது. அத்துடன் சாராயம், பியர் ஆகிய மதுபான நுகர்வுக்காக சுமார் 690 மில்லியன் ரூபாவை நாளொன்றுக்கு நாசெலவிடுவதாகவும் கூறப்படுகின்றது.

தேசிய அபாயகர போதை திருப்பு சபை (National Dangerous Drugs control board – NDDCB) 1984 இல் நிறுவப்பட்டது. அதின் அறிக்கைப்படி 40 000 மேற்பட்டோர் போதைப்பொருள் பாவனையின் மூலம் நிரந்திர அடிமையாக்கப்பட்டுள்ளனர் எனக் கூறுகின்றது. இவ் நிறுவனமானது போதைத் தடுப்பு, மீட்பு மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளைச் செய்வதுடன் விழிப் புணர்வுகள் ஆலோசனைகளையும் நிகழ்த்தி வருகின்றது.

போதை அடிமையாதலிற்கு பல காரணங்கள் காரணமாகின்றன. அந்தவகையில் தவறான அறிகை மற்றும் நம்பிக்கை (போதை – வீரம், சந்தோசம், வலி நீக்கும் உக்ஷாரை ஏற்படுத்தும் என்ற தவறான அறிக்கை மற்றும் நம்பிக்கை)

முறையான தண்டனைகள், தாழ்வு மனப்பான்மை, ஒதுங்கியிருத்தல், அதிகார உணர்வு, நாகரீக மாற்றம், நுதெழலஅநவீரசிழளந, சினிமா,மவறான நண்பர்கள் சேர்க்கை என்பனவும் காணப்படுகின்றன.

அதிகாரத்தன்மை போதையை அதிகமாக உள்ளெடுத்தல், சகிப்புத்தன்மை இன்மை, ஒதுங்கியிருப்பு, பொறுப்புக்களிலிருந்து விடுபடல், போதையில் அதிக நாட்டம், உடல் காயங்கள், போதை உள்தொடுப்பதில் ஆர்வம், விருப்பு போன்றவற்றை அதிகளவாகக் கொண்டிருப்பர்.

இதன் விளைவுகள் தனி நபரை மட்டுமல்லாது குடும்பம், சமூகம் என பாதிப்பை ஏற்படுத்தி உலகளாவிய ரீதியில் பல விளைவுகளையும் உண்டுபண்ணுகின்றன. அந்த வகையில்

01. உடல் – மூளை பாதிப்பு – நரம்பு மண்டல பாதிப்பு, தற்கொலை, முயற்சி , ஈரல் பாதிப்பு, இதய பாதிப்பு இரப்பை அழற்சி.

02. உளம் – மறதி அதிகரிப்பு – வெறுப்பு, பயம், திருமண வாழ்வு பாதிப்பு, பிரம்மை ஏற்படல், பாலியல் திருப்தியின்மை, ஆர்வமின்மை, உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமை, அதிகரித்த மனவெழுச்சிகள் மனச்சோர்வு.

03.சமூகம் – சமூகச் சீர்கேடுகள் துக்ஷ்பிரயோகங்கள் – சண்டைகள், விபத்துக்கள், குற்றச் செயல்கள் அதிகரிப்பு, விவாகரத்துக்கள், பொதுச்சொத்துக்கள் நாசமாக்குதல், குடும்பப் பிரச்சினை முதலான பல்வேறுபட்ட

தொடர்ச்சி▼

# போதைக்கு அடிமையாதலை களையும் சிகிச்சை முறைகள்!

**தொடர்ச்சி▲**

விளைவுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான நிலைமையில் நாம் போதை அடிமையாதலைகளையும் சிகிச்சை மற்றும் தடுப்பு முறைகள் பற்றி

**சற்று விரிவாக நாம் அவதானிப்போம்.**

■ பிரச்சினைகளை கையாளக் கற்றுக் கொடுத்தல் – பலர் தங்களுடைய பிரச்சினைகளை உரிய முறையில் கையாளத் தெரியாத நிலையில் இப் பழக்கத்துக்குப் படுகின்றனர். ஆதலால் நம் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை கையாளவும்ஃஅவ் தீர்க்கவும் உரிய நல் வழிமுறைகள் மற்றும் நுட்பங்களைக் கற்றுகொடுத்தல்.

■ அறிகை நடத்தை சிகிச்சை (Cognitive Behaviour Therapy) – தவறான எண்ணங்கள்ஃஅவ் அறிகையை மாற்றி நடத்தையிலும் அறிகையிலும் சீரான மாற்றத்தை ஏற்படுத்துவதை இச் சிகிச்சை முதன்மையாகக் கொண்டது. இச் சிகிச்சையால் புதிய சிந்தனைகள் ஏற்பட்டு நடத்தை சீரடைவதுடன் போதை அடிமையிலிருந்து மீளவும் உதவுகிறது.

■ உரையாடல் திறன் வளர்ப்பு

■ தனது பிரச்சினைகள் மற்றும் கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் பிறருக்கு வெளிப்படுத்தவும் பிறரின் கருத்துக்களை உள்வாங்கவும் பயிற்சியளிக்கப் படுகிறது. இதன் மூலம் உதவும் பண்பும் மேம்பாடு அடைவதுடன் நம்பிக்கைஃ ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, மகிழ்ச்சி போன்றனவும் ஏற்படுகின்றன. ஆதரவும் கிடைக்கப்பெறுவதுடன் சலிப்பு, தனிமை, மனஅழுத்தம், மனச்சோர்வு என்பன குறைவடைகின்றன.

■ வைத்திய ஆலோசனைய மற்றும் மருத்துவ முறைகள் – அடிமைப்படுத்தும் மருந்துகள் மற்றும் போதையின் பிரச்சினை பற்றி வைத்தியரிடம் மற்றும் உள மருத்துவரிடம் ஆலோசனை பெறமுடியும். மருத்துவ முறைகள் மூலம் போதைப்பாவனை தணித்தல், மனநிலை மாற்றம், போதை அடிமையிலிருந்து மீளுதல், சரியான உணவு, நித்திரைப் பழக்கம் போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

■ தளர்வுப் பயிற்சிகள் – உடல் மற்றும் உளத்தை தளர்வுபடுத்தி ஆசுவாசப்படுத்தும் பயிற்சிகளை உரிய நேரத்துடனும் அதற்கேற்ற இடத்திலும் இருந்து அதனைச் செய்தல். சுவாசப்பயிற்சி, தியானம்,யோகாசனம், மந்திரஉச்சாடனம், உடற்பயிற்சிகள் என்பன மனத்தை மேம்படுத்தி நெருக்கீடுகள் ஏற்படாமல் தடுக்கின்றது.

■ பொழுதுபோக்குகளில் ஃடவ்டுபடல் – ஓய்வு நேரத்தில் தமக்கு பிடித்தமான விளையாட்டுக்களிலோ, செயற்பாடுகளிலோ ஈபட ஊக்குவித்தல்.

■ நாளேடு எழுதுதல் – தான் செய்யும் தினசரி செயற்பாடுகள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றை நாளேட்டில் (Diary) தவறாது எழுதிவருவது இப் பழக்கத்திலிருந்து மீண்டெழுவதற்கு உதவுகிறது. இதனைத் தொடர்ந்து செய்வதின் ஊடாக புதிய எண்ணங்கள் ஏற்படுத்தப்படுவதுடன் நடத்தைகளும் வலுவூட்டப்படும் அத்துடன் மனமானது கட்டுப்பாட்டுடன் இயங்கவும் தொடங்குகிறது.

■ வெறுப்பூட்டல் முறை – அருவருப்பு அளித்தல் மற்றும் அதிர்ச்சி விடயங்களுடன்

போதைப்பொருள் இன்பத்தையும் இணைத்து அனுபவிக்க வைப்பதன் மூலம் வெறுப்பை ஏற்படுத்துவது இம்முறை ஆகும். போதைப் பொருளை உட்கொள்ள முயலும் போது மின் அதிர்ச்சி கொடுத்தல் அல்லது வெறுப்பூட்டும் காட்சியை கற்பனை செய்ய வைப்பதன் மூலம் இது இடம்பெறும்.

■ குடும்ப ஆற்றுப்படுத்தல் – போதைக்கு அடிமையான நபர் குடும்பத்தில் உள்ளார் ஆயின் அவரை மீட்டெடுக்க வேண்டிய கடமை முழுக்குடும்பத்திற்கும் உண்டு. குறித்த நபரை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து எவ்வாறு மீண்டெழ பங்களிப்புச் செய்யலாம் என கற்றுக் கொடுக்க வேண்டும்.

இத்துடன் பிள்ளை வளர்ப்பு முறை, பிரச்சினை தீர்த்தல் நுட்பங்கள் போன்றனவும் கற்றுக் கொடுக்கப்படும்.

■ கலை வழி குணமாக்கல் – சித்திரம், ஓவியம் வரைதல், சிற்பங்கள் செய்தல், கட்டுரை, கவிதை, சிறு கதைகள் எழுதித் தூண்டுவதின் ஊடே துன்பம் தீரும் அனுபவம் குறைவடைந்து குணமாக வழிவகுக்கும்.

■ குழுவழி குணமாக்கல் – குறித்த பிரச்சினை உள்ளவர்கள் குழுவாக இணைந்து பிரச்சினை தீர்ப்பது பற்றி, உறவுகளை மேம்படுத்துவது, உதவுவது, ஆரோக்கியமாக பயணிப்பது போன்றவற்றுக்கான தெளிவுகிடைப்பது மட்டுமல்லாமல் நம்பிக்கை, ஒற்றுமை, குழு இணைவு, ஆளிடைத் தொடர்பு, உதவி செய்யும் மனப்பாங்கும் ஏற்பட்டு போன்ற அடிமையிலிருந்து மீண்டெழவும் உதவுகின்றது.

■ ஊக்குவித்தல் – இப் பழக்கத்தை கைவிட எண்ணும் துணைநாடி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் அவரை ஊக்கப்படுத்துவதுடன் சிறுவெகுமதி வழங்கல், பாராட்டுதல், புகழ்தல் என்பன தன்நம்பிக்கையை அதிகரித்து குறித்த போதைப்பழக்கத்தை களைய உதவுகின்றது.

■ நச்சுநீக்கல் – மருந்துகள், ஊசி மூலம் போதையால் ஏற்பட்ட நச்சுக்கள் அகற்றப்படும். இது அமிலம் அகற்றல் (Detoxification) எனவும் அழைக்கப்படும். இதனுடன் இணைந்து விற்றமின் மாத்திரைகளும் வழங்கப்படும். ஏன் எனில் அவர் போதிய சத்தான உணவுகள் உண்ணாததால் இது வழங்கப்படும்.

அத்துடன் தூக்கமின்மை சீர் செய்வதற்கான மருந்துகளும் பாதிப்புக்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படும்.

■ சமூக ஆதரவு – சமூக மட்டத்தில் குறித்த நபரை இயங்க எத்தணித்தல். அத்துடன் சமூக செயற்பாடுகள் திருவிழாக்கள் மற்றும் கருத்தரங்குகள், தொழிற்பயிற்சிப் பட்டறைகளில் ஈடுபடவைத்தல். அத்துடன் விழிப்புணர்வு செயற்படுத்தலும், தொண்டர் சேவைகளிலும் இணைந்து பணியாற்று செய்வதுடன் சமூக நலத் திட்டங்களிலும் ஈடுபடச் செய்தல்.

■ ஆசைமறுப்பு பயிற்சி அளித்தல் – போதை ஆசை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஊட்டப்படுகிறது. சகபாடிகள் மற்றும் சூழல் என்ற அடிப்படையில் இடம் பெறுகிறது. முதலில் ஒருவருக்கு சிறிதளவு போதைப் பொருள் கொடுத்தே அறிமுகம் செய்யப்படுகிறது. அதன் பின் அவருக்கு அதிகம் உட்கொள்ள வேண்டும் என்ற ஆசை தொடங்குகிறது. இதனால் அந்த ஆசையை மறுப்பதற்கான பயிற்சிகளை உரிய முறையில் அளிக்க வேண்டும்.

■ தூண்டிகளை விலக்கல் – போதைப்பொருள் பாவனை தூண்டுவோர் மற்றும் போதை இலகுவாகக் கிடைக்கும் சூழலிலிருந்து விலகி இருத்தல். அத்துடன் போதையிலிருந்து மீள போதையை நினைவூட்டும்

அனைத்தையும் தவிர்த்து உறுதியான தீர்மானத்துடன் அதிலிருந்து மீள வேண்டும்.

■ சுய முகாமைத்துவம் – போதை தொடர்பான சுய விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். போதை அடிமையால் ஏற்படும் பிரச்சினைகள் விளைவுகள் பற்றிய தெளிவும் இருத்தல் அவசியம். சுயமாக தீர்மானம் எடுக்கவும், தன்நம்பிக்கையுடன் செயற்படவும் பழகுதல். அத்துடன் உளக்கல்வியை பெற்றுக் கொள்வதுடன் சரியாக மீண்டெழும் ஆவலையும்ஃஅவ் உறுதியான தீர்மானத்தை

கடைப்பிடிப்பதன் ஊடாக போதை அடிமையிலிருந்து மீண்டெழமுடியும்.

**நடராசா கோபிராம்,**
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.



# கைத்தொழில் நிறுவன உரிமையாளரது பிரச்சினைகள் தொடர்பில் கந்துரையாடல்

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள தேங்காய் மட்டை சார்ந்த கைத்தொழில் நிறுவன உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் இ. த. ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது .

கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூல வளங்களை பெற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இது தொடர்பாகக் கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவியாக ஒவ்வொரு நிறுவனங்களும் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மற்றும் சர்வதேச தேங்காய் தினமான செப்ரெம்பர் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் வடமாகாணத்தில் 2



ஆவது தெங்கு முக்கோண வலயம் உருவாக்கப்பட்டு அது தொடர்பான செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப் படவுள்ளமை தொடர்பாகவும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சி னைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



# உலக உணவு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பாடசாலைத் தோட்ட முன்னேற்றக் கூட்டம்

உலக உணவு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத் தோட்ட பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான முன்னேற்ற கூட்டம் பச்சி லைப்பள்ளி பிரதேச செயலாளர் இ. த. ஜெயசீலன் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது .

கலந்துரையாடலில் உதவி பிரதேச செயலாளர் திருமதி ச. குணஜா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதி மாகாணக் கல்வி பணிப்பாளர், உலக உணவுத் திட்டப் பிரதிநிதி, பாடசாலை அதிபர் கள், ஆசிரியர்கள், கால்நடை போத னாசிரியர், விவசாய போதனாசிரியர் , பொது சுகாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர் பயனா ளிகள் கலந்து கொண்டனர்.

இதில் வீட்டுத் தோட்டம், கோழி வளர்ப்புத் திட்ட முன்னேற்றங்கள் பரி சீலனை செய்யப்பட்டன.





# தம்பலகாமத்தில் மக்கள் சேவை மன்றத்தால் மேலும் 15 நிரந்தர வீடுகள் அமைத்து வழங்கல்

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் வாழ்வதற்கான தங்குமிட வசதிகள் மேம்படுத்திக் கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் தம்பலகாமம் பிரதேசத்தில் மேலும் 15 நிரந்தர வீடுகள் அமைத்துக் கையளிக்கும் நிகழ்வு மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் தலைமைளில் இடம்பெற்றது.

யுத்தம் மற்றும் பொருளாதார கஸ்ட நிலமைகளில் நிரந்தர மற்றும் பாதுகாப்பு வீடுகள் இல்லாது பல கஸ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வந்த 40 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் தம்பலகமம் பிரதேச செயலகத்தின் பங்கேட்புடன் பயனாளிகளுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன.

சிலி நாட்டைத் தலைமையமாகக் கொண்டு இயங்கி வரும் சர்வதேச தொண்டு நிறுனமான செலவிப் பவுண் டேசன் நிறுவனத்தின் நிதிப் பங்களிப் புடன் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் மேற்படி நிரந்தர வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தம்பலகமம் பிரதேச செயலளார் திருமதி. ஜெ. ஸ்ரீபதி பிரதம அதிதியாகவும், தம்பலகமம் உதவிப் பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன் பொருளாதார அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள், கிராம சேவையாளர்கள், மக்கள் சேவை மன்ற உத்தியோகத்தர்கள், சமூகமட்ட நிறுவனப் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.







# ஜப்பான், சீனாவுக்கு பிரதமர் மோடி பயணம்: சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்திக்கிறார்




ஜப்பான், சீனாவுக்கு பிரதமர் மோடி 4 நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்கிறார். முதல்கட்டமாக அவர் நேற்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு புறப்பட்டார். அங்கிருந்து சீனா செல்லும் அவர் ஓகஸ்ட் 31 ஆம் திகதி திகதி ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்துப் பேசுகிறார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 15 ஆவது இந்திய, ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு இன்று மற்றும் நாளை நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி நேற்று டில்லியில் இருந்து டோக்கியோவுக்கு புறப்பட்டார்.

இந்த மாநாட்டில் ஜப்பான் பிரதமர் ஷிகேரு இஷிபாவை, அவர் சந்திக்கிறார். அப்போது பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகள் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் ஆலோசனை நடத்த உள்ளனர்.

டோக்கியாவில் இருந்து நாளை பிரதமர் நரேந்திர மோடி சீனாவின் தியான்ஜின் நகருக்கு செல்கிறார். அங்கு ஓகஸ்ட் 31, செப்ரம்பர் 1 ஆகிய திகதிகளில் நடைபெற உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் (எஸ்.சி.ஓ) அவர் பங்கேற்கிறார். இந்த மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், இந்திய பிரதமர் மோடி, பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா, இந்தோனேசியா ஜனாதிபதி பிரபோவா, சுபியாண்டோ, பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப் உட்பட 20 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

கடந்த 2018 ஜூனில் சீனாவின் குயிங்தவோ நகரில் நடைபெற்ற எஸ்.சி.ஓ. மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றார். கடந்த 2019 இல் லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா – சீனா வீரர்கள் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக சீனாவுக்குசெல்வதை பிரதமர் மோடி முழுமையாக புறக்கணித்தார். இந்த சூழலில் சுமார் 7 ஆண்டுகளுக்குப் பிறகு எஸ்.சி.ஓ. மாநாட்டில் பங்கேற்க அவர் சீனாவுக்கு செல்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா மீதான அமெரிக்க வரியை ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் ஈடுசெய்யும்

## பிட்ச் நிறுவன ஆய்வில் தகவல்




அமெரிக்க வரி விதிப்பை ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் ஈடுசெய்யும் என்று பிட்ச் நிறுவன ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அமெரிக்க வரிவிதிப்பின் தாக்கம் குறித்து பிட்ச் சொல்யூஷன்ஸ் நிறுவனம் (பி.எம்.ஐ) நேற்று வெளியிட்ட ஆய்வறிக்கையில்,

“அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்புகள் சில தொழில்களில் தாக்கத்தை ஏற்படுத்தினாலும் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6 சதவீதத்துக்கும் மேலாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்கள் அமல்படுத்தப்படும் பட்சத்தில் அது உள்நாட்டு நுகர்வை பெரிதும் ஊக்குவிக்கும். குறிப்பாக, இரண்டடுக்கு வரி சீர்திருத்தத்தை மேற்கொள்வது நிதி, சேவைகள், சிமெண்ட், நுகர்வோர் பொருள்கள் துறையில் லாபத்தை அதிகரிக்கும். உள்நாட்டு நுகர்வு சூடுபிடிக்கும்பட்சத்தில் அது அமெரிக்காவின் வரி தாக்கத்தை எதிர்கொள்ள பெரிதும் உதவிகரமாக இருக்கும்.” என்று கூறப்பட்டுள்ளது.

# இஸ்ரேலின் ட்ரோன் தாக்குதலில் சிரியப் படையினர் பலர் உயிரிழப்பு









டமாஸ்கஸ்/க்கு அருகே நடத்தப்பட்ட இஸ்ரேலிய ட்ரோன் தாக்குதல்களில் சிரியாவின் படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவின் மீது இந்த வாரத்தில் இஸ்ரேலிய படையினர் நடத்திய தொடர் தாக்குதல்களில், இதுவும் ஒன்றாகும் என்று அந்த நாட்டின் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், இஸ்ரேலின் நடவடிக்கை, சர்வதேச சட்ட மீறல் என்றும் தமது இறையாண்மையை மீறும் செயல் என்றும் சிரியாவின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம், இஸ்ரேலிய படையினர் சிரியாவின் மீது தாக்குதல் நடத்திய அதேநேரம், அந்தப் பகுதியில் உள்ள இராணுவ தளம் ஒன்றில் வான்வழித் தரையிறக்கத்தை மேற்கொண்டதாக சர்வதேச மற்றும் சிரிய அரசு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இஸ்ரேலிய படைகள் அங்கு என்ன செய்தன, எவ்வளவு காலம் தங்கியிருந்தன என்பது குறித்து வேறுபட்ட அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து கருத்துரைத்துள்ள இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர், தமது நாட்டில் பாதுகாப்புக்காக அனைத்து போர் மண்டலங்களிலும் படைகள் இரவும் பகலும் செயல்பட்டு வருகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

தகவல்களின்படி, இந்த ஆண்டு இஸ்ரேல் சிரியாவின் மீது 95 தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில் 85 வான்வழித் தாக்குதல்களும் 10 நில நடவடிக்கைகள் அடங்குவதாக பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

# தென்கொரிய முன்னாள் ஜனாதிபதியின் மனைவி கிம் மீது ஊழல் குற்றச்சாட்டு!

தென் கொரியாவின் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலின் மனைவி கிம் கியோன் ஹீ மீது லஞ்சம் மற்றும் பிற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக சிறப்பு சட்டத்தரணிகள் குழு இன்று தெரிவித்துள்ளது.

நாட்டின் இராணுவச் சட்ட நெருக்கடி மற்றும் ஒரு காலத்தில் சக்திவாய்ந்த தம்பதியினர் சம்பந்தப்பட்ட ஊழல்கள் குறித்து விரிவான விசாரணை நடைபெற்று வரும் நிலையில் இந்த குற்றச்சாட்டு வந்துள்ளது.

யூன் மற்றும் கிம் இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர்.

2024 டிசம்பரில் இராணுவச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான தவறான முயற்சியின் விளைவாக கடந்த ஏப்ரல் மாதம் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து



கிளர்ச்சி உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் யூன் ஏற்கனவே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

யூன் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னரும், ஜூன் தொடக்கத்தில் தாராளவாத ஜனாதிபதி லீ ஜே மியுங் பதவியேற்றதிலிருந்தும் நியமிக்கப்பட்ட சிறப்பு சட்டத்தரணிகளால் இந்த ஜோடி தனித்தனி விசாரணைகளை எதிர்கொள்கிறது.

கிம் மீதான குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் பல ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

பக்கங்கள் - 03

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 29/08/2025

## வெளிநாட்டவர்களுக்கு தொழில் வழங்கக்கூடாது

கனடிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



C3▶



# இந்தியா - கனடா உறவை வலுப்பெற வைக்க முயற்சி

## புதிய தூதர்கள் நியமனம்

கனடாவும் இந்தியாவும் இரு நாடுகளுக்குமான தங்கள் தூதர்களை புதிதாக நியமித்துள்ளன.

கனடா தனது புதிய இந்திய தூதராக அனுபவமிக்க டிப்ளோமாட் கிறிஸ்டோபர் கூட்டரை நியமித் திட்டுள்ளது. இந்த பதவி கடந்த ஆண்டு வெற்றிடமாக இருந்தது.

அதேபோல் இந்தியாவும் கனடாவுக்கான தனது புதிய தூதராக தினேஷ் கே. பட்நாயக்கை நியமிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த இரு நியமங்களும், கடந்த ஆண்டு ஏற்பட்ட கடுமையான அரசியல் மோதலுக்குப் பிறகு, இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகள் மீண்டும் மேம்படுவதற்கான முக்கிய முயற்சியாக கருதப்படுகிறது.

2023 இல் சீக்கிய பிரிவினைவாத தலைவர் ஹர்திப் சிங் நிஜ்ஜார் கனடாவில் கொலை செய்யப்பட்டார். அவரை இந்தியா 2020 இல் தீவிரவாதியாக அறிவித்திருந்தது.C2▶

# அமெரிக்க வரி விதிப்புக் காரணமாக கனடாவில் வாடிக்கையாளர் வீழ்ச்சி



அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள வரிகளினால் கனடிய வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படக்கூடிய அபாயம் உருவாகியுள்ளது.

அமெரிக்க வரி விதிப்பினால் ஏற்படக்கூடிய செலவு அதிகரிப்பினை வாடிக்கையாளர்கள் மீது திணிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

C2▶



## கனடாவில் மலர்ந்த காதல்:

# அமெரிக்கப் பெண்ணை தமிழ் முறைப்படி திருமணம் செய்த கோவை இளைஞர்

தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும், அமெரிக்காவைச் சேர்ந்த சேர்ந்த இளம்பெண்ணுக்கும் தமிழ் முறைப்படி திருமணம் நடைபெற்றது.

தமிழகத்தின் கோயம்புத்தூரைச் சேர்ந்த இளைஞர் கௌதம். இவர் கனடாவில் படித்து அங்கேயே ஐ.டி நிறுவனம் ஒன்றில் பணிக்கு சேர்ந்தார்.

இவருடன் கல்லூரியில் ஒன்றாக படித்தவர் அமெரிக்காவின் வொஷிங்டன் டி.சியைச் சேர்ந்தவர் சாரா.

இருவரும் காதலித்து வந்த நிலையில், கல்லூரி பட்டமளிப்பு விழாவில் தங்களது காதல் குறித்து பெற்றோர்களிடம் கூறியுள்ளனர்.



அவர்களும் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கவே, கௌதம் மற்றும் சாரா இருவரும் கனடாவில் உள்ள மென்பொருள் நிறுவனமொன்றில் பணியாற்றி வந்தனர்.

இந்த நிலையில் சாராவின் பெற்றோர் தமிழ் கலாச்சார முறைப்படி திருமணம் நடைபெற வேண்டும் என்று தங்கள் விருப்பத்தை கூறியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாவட்ட கொடிசியா வளாகத்தில் காதல் ஜோடி கௌதமிற்கும், சாராவிற்கும் தமிழ் கலாச்சார முறைப்படி திருமணம் நடைபெற்றது.

இதில் அமெரிக்கா மற்றும் கனடாவைச் சேர்ந்த மணமகளின் உறவினர்கள், நண்பர்கள் என பலரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

---

### இந்தியா - கனடா

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கொலையில் இந்திய அரசின் தொடர்பு இருப்பதாக முன்னாள் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியதால் இரு நாடுகளும் தூதர்களை வெளியேற்றின.

இந்தியா கனடாவின் 6 மூத்த தூதர்களை வெளியேற்றியது. அதேபோல், கனடாவும் இந்திய தூதரை வெளியேற்றியது.

2025 ஜூனில், கனடா பிரதமர் மார்க் கார்னி மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து, மூத்த தூதர்களை மீண்டும் நியமிக்க ஒப்பந்தமானார்கள்.

இது இரு நாடுகளுக்கிடையேயான அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளை மீண்டும் கட்டமைக்கும் முயற்சியாகும்.

---

### அமெரிக்க வரி...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய புள்ளிவிபரத் தகவல்களின் அடிப்படையில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

கனடாவில் உள்ள கிட்டத்தட்ட 40 சதவீத வணிக நிறுவனங்கள் அடுத்த ஒரு ஆண்டில் அமெரிக்க வரி கட்டணங்களால் ஏற்படும் செலவு உயர்வுகளை வாடிக்கையாளர்கள் மீது சுமத்துவதற்கு திட்டமிட்டுள்ளன.

39.4 சதவீத வணிகங்கள் அடுத்த 12 மாதங்களில் அமெரிக்க வரி கட்டணங்களால் ஏற்படும் செலவு உயர்வுகளை அதிகளவில் அல்லது ஓரளவு நுகர்வோருக்கு பகிர்ந்து கொள்ள வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளன.

இதற்கு மாறாக, 15.4 சதவீத கனடிய வணிகங்கள் இதேபோன்ற செலவு உயர்வுகளை நுகர்வோருக்கு பகிர்ந்து கொள்ள வாய்ப்பில்லை அல்லது ஓரளவு வாய்ப்பில்லை என்று கூறியுள்ளன.

மேலும், 27.2 சதவீத வணிகங்கள் அடுத்த 12 மாதங்களில் கட்டணங்களால் எந்த செலவு உயர்வையும் எதிர்பார்க்கவில்லை என தெரிவித்துள்ளன.



# கனடாவில் நிரந்தர குடியுரிமை பெறுவதில் தொழில் முனைவோருக்கு பெரும் சிரமம்

கனடாவில் நிரந்தர குடியுரிமை பெறுவதில் வெளிநாட்டு தொழில்முனைவோர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்டார்ட்-அப் விசா திட்டம் புத்தாக்க தொழில்முனைவோரை ஈர்ப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். எனினும் விண்ணப்பதாரர்கள் பணி அனுமதி மற்றும் நிரந்தர குடியுரிமை பெறுவதில் நீண்ட தாமதங்களை எதிர்கொள்வதாக புலம்பெயர்ந்தோர் நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பணி அனுமதி பெற்றவர்கள், நிரந்தர குடியிருப்பாளர்களை விட தங்கள் வணிகத்தை தொடங்குவதற்கும் நிதியுதவி பெறுவதற்கும் பல தடைகளை எதிர்கொள்கின்றனர் என டொராண்டோவைச் சேர்ந்த க்ரீன் அண்ட் ஸ்பீகல் நிறுவனத்தின் உயர் அதிகாரி ஸ்டீபன் க்ரீன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தற்போது வணிக தொழில் முனைவோருக்கு கனடாவுக்கு வருவதற்கு ஒரே வழியாக உள்ளது. ஆனால், வங்கிகள் பணி அனுமதியில் உள்ளவர்களுக்கு நிதியுதவி வழங்குவதில் தயக்கம் காட்டுவதாக க்ரீன் கூறியுள்ளார்.

2013 இல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 900 இற்கும் மேற்பட்ட ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, 3,000 இற்கும் மேற்பட்ட தொழில் முனைவோர் நிரந்தர குடியுரிமை அனுமதிகளை பெற்றுள்ளனர்.

ஆனால், 42,200 விண்ணப்பங்களில் 16,370 விண்ணப்பங்கள் 24 மாதங்களுக்கு மேலாக இறுதியாகப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

# வெளிநாட்டவர்களுக்கு தொழில் வழங்கக்கூடாது

## கனடிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

வெளிநாட்டவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கக் கூடாது என கனடிய கன்சர்வேட்டிவ் கட்சி தலைவர் பியர் பொய்லிவர் தெரிவித்துள்ளார்.

கனடா இளைஞர்களின் வேலை இழப்பு அதிகரித்துக் கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஆளும் லிபரல் அரசு தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர்களை அதிக அளவில் அனுமதிப்பதன் மூலம் உள்ளூர் இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறிக்கிறது என குற்றம் சாட்டியுள்ளார்.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தகவலின்படி, ஜூலை மாதத்தில் இளைஞர் வேலை இழப்பு விகிதம் 14.6 வீதமாக உயர்ந்துள்ளது.

இது 2010 இற்கு பின்னர் மிக உயர்ந்த



எண்ணிக்கை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசு நிர்ணயித்த அளவைக் கடந்தும் தற்காலிக தொழிலாளர் வீசாக்களை வழங்கியுள்ளதாக பொய்லிவர், கூறியுள்ளார்.

இதேவேளை, வெளியிடப்பட்ட 1,05,000 வீசாக்களில் பெரும்பாலானவை புதுப்பிப்புகள் என்றும், புதியவர்களின் எண்ணிக்கை 33,722 மட்டுமே எனவும் குடிவரவு துறை விளக்கம் அளித்துள்ளது.

இதையடுத்து, குடியேற்றக் கொள்கை மற்றும் வேலை வாய்ப்பு பிரச்சினை கனடாவில் அரசியல் விவாதமாக மாறியுள்ளது.

லிபரல் அரசின் பலவீனப் புள்ளியாகவும், கன்சர்வேட்டிவ் கட்சிக்கு தேர்தல் பிரச்சார ஆயுதமாகவும் இது கருதப்படுகிறது.